Department of Education,Sabaragamuwa Province/ Weekly School Department of Education,Sabaragamuwa Province/ Weekly School

தரம் - 10

தேர்ச்சி -காசேடும் சில்லறை காசேடும்

பாடம் வணிகமும் கணக்கீட்டு கல்வியும்

தயாரிப்பு
செல்வி. ம. தயானி BBA (Hons.)
கே / தெஹி / ஸ்ரீவாணி த. ம. வி

08 - காசேடும் சில்லறை காசேடும்

<u>காசேடு</u>

வணிக கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புடைய காசு பெறுவனவுகளையும் காசு கொடுப்பனவுகளையும் பதிவதற்கான முதல் பதிவேடு காசேடு ஆகும்.

காசு கிடைப்பனவு பெறுவனவு சந்தர்ப்பங்கள்

(அதாவது காசு வணிகத்தினுள்ளே வருதல்)

- உரிமையாளர் வணிகத்திற்கு காசு கொண்டு வரும் போது
- காசு விற்பனையின் போது
- கடன்பட்டோரிடம் இருந்து காசு பெறும்போது
- காசை கடனாக பெறும்போது
- வாடகை தரகு வட்டி போன்ற வருமானங்கள் பெறும்போது

காசு கொடுப்பனவு சந்தர்ப்பங்கள்

(வணிகத்தை விட்டு காசு வெளியேறும் சந்தர்ப்பங்கள்)

- கடன்களை மீள செலுத்துதல்
- காசிற்கு கொள்வனவு மேற்க்கொள்ளும்போது
- கடன்கொடுனருக்கு காசு செலுத்தும் போது
- ஊழியர் சம்பளம், மின்சார கட்டணம், வாடகை, காப்புறுதி கட்டண போன்ற கொடுப்பனவுகளை செய்யும்போது
- காசிற்கு சொத்துக்களை கொள்வனவு செய்யும்போது
- உரிமையாளர் வணிகத்திலிருந்து காசை பற்றும் போது
-

மூல ஆவணம்

காசு பெறுவனவு - பற்றுசீட்டு

காசு கொடுப்பனவு - கொடுப்பனவு கைச்சாத்து / உறுதிச்சான்று

பற்றுசீட்டு / ரொக்கசீட்டு / காசு மெமோ

வணிகருக்கு யதாயினுமொரு முறையில் காசு கிடைக்குமிடத்து அக்காசு பெறுவனவை உறுதிபடுத்தி வணிகத்தினால் காசு கொடுத்த நபருக்கு கொடுக்கும் ஆதாரமே **பற்றுசீட்டு** எனப்படும்.

பற்றுசீட்டில் காணப்படும் விடயங்கள்

- தொடரிலக்கம்
- காசு கிடைத்த திகதி
- காசு கிடைத்தமைக்கான காரணம்
- காசு பெற்றுக்கொண்ட காசாளரின் கையொப்பம்
- காசு பெற்றுக்கொண்ட வணிகத்தின் விலாசம்
- கிடைத்த பெறுமானம்

இப்பற்றுசீட்டினையே மூல ஆவணமாக கொண்டு காசேட்டில் காசு பெறுவனவுகளை பதிதல் வேண்டும்

பற்றுசீட்டு ஒன்றின் மாதிரி:

பற்றுச்சீட்டு

தொடர் இலக்கம் :- 20513

மாலினி புத்தகசாலை,
82, யோர்க் வீதி
கொழும்பு
தொ.பே. :- 0112030278
திகதி ....

....

இலக்க .... பட்டியல் தொடர்பாகக் கிடைக்கவேண்டிய ரூ. .... தொகையினை காசோலையாக/பணமாகப் பெற்றுக் கொண்டேன்.

ரூ. ....

தயாரித்தவர் | பரிசீலனை செய்தவர் | உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்

<u>கொடுப்பனவு கைச்சாத்து</u>

வணிகத்தால் மேற்க்கொள்ளப்படும் சகல பணக்கொடுப்பனுவுகளின் போதும் அவை தொடர்பான தகவல்களை உள்ளடக்கி பொறுப்பு வாய்ந்தவரால் கையொப்பமிட்டு கொடுப்பனவை உறுதிபடுத்துவதற்காக தயாரிக்கப்படும் மூல ஆவணம் கொடுப்பனவு கைச்சாத்து எனப்படும்.

கொடுப்பனவு கைச்சாத்தில் காணப்படும் விடயங்கள்

- தொடரிலக்கம்
- கொடுப்பனவுக்குரிய காரணம்
- கொடுப்பனவு திகதி
- பொறுப்பாளரின் கையொப்பம்
- கொடுப்பனவு தொகை

கொடுப்பனவு கைச்சாத்தை மூல ஆவணமாக கொண்டு காசேட்டில் காசு கொடுப்பனவுகளை பதிதல் வேண்டும்

கொடுப்பனவு கைச்சாத்து ஒன்றின் மாதிரி:

வரையறுத்த பிரியங்கா கம்பனி

வவுனியா

தொடர் இலக்கம் :- .... திகதி ....

.... க்குக் கொடுப்பனவு

விபரம்	செலுத்திய பணம்

காசோலை இலக்கம் :- ....

....	....	....
தயாரித்தவரின் கையொப்பம்	கொடுப்பனவை அனுமதிக்கும் அதிகாரியின் கையொப்பம்	கொடுப்பனவை உறுதிப்படுத்தும் அதிகாரியின் கையொப்பம்

<u>காசேட்டின் இரட்டை தொழிற்பாடு</u>

- மூல ஏடாக தொழிற்படல்
- பேரேடாக தொழிற்படல்

இங்கு காசேட்டிற்கென தனியாக ஒரு பேரேடு பேணப்படமாட்டாது. காசேடு பேரேட்டையும் ஒத்திருப்பதால் அதை மூல ஏடாகவும் பேரேடாகவும் பயன்படுத்தலாம் .

<u>காசுக் கொடுக்கல் வாங்கல்களை பதிவு செய்தல்</u>

- இங்கு அலகு 6 இல் கற்ற இரட்டை பதிவு விதி பயன்படுத்த வேண்டும்
- காசேட்டின் இரட்டை தொழிற்பாட்டினை நினைவில் கொள்ள வேண்டும்

காசு பெறுவனவு - இதன்போது சொத்து கூடும் ஆகவே காசேட்டின் வரவு நிரலில் பதிய வேண்டும்

காசு கொடுப்பனவு - காசு வணிகத்தை விட்டு வெளியே செல்லும் போது சொத்து குறையும் . ஆகவே காசேட்டின் செலவு நிரலில் பதிய வேண்டும்

காசு பெறுவனவை வரவு வைக்கும் போது அதற்குரிய செலவு பதிவிற்கு மாத்திரமே பேரேட்டில் பதிவை மேற்க்கொள்ள வேண்டும். (இரட்டை பதிவை நினைவில் கொள்க)

01. உரிமையாளர் 100000 வணிகத்திற்கு மூலதனமாக கொண்டு வருதல்

இதற்கான இரட்டை பதிவு

காசு கணக்கு வரவு 100,000. 00
மூலதன கணக்கு செலவு 100,000.00

இது காசேட்டில் வரவு பக்கம் பதியப்படும். பேரேட்டில் பதியப்படமாட்டாது. ஏனெனில் காசேடு மூல ஏடாகவும் பேரேடாகவும் தொழிற்படும்

மூலதன கணக்கானது பேரேட்டு கணக்கில் வருமாறு பதியப்படும்

மூலதன கணக்கு

திகதி	விபரம்	பேப	தொகை	திகதி	விபரம்	பேப	தொகை
				xxx	காசு		100,000.00

காசு கொடுப்பனவுகளை செலவு வைக்கும் போது அதற்குரிய வரவு பதிவிற்கு மாத்திரமே பேரேட்டில் பதிவை மேற்க்கொள்ள வேண்டும். (இரட்டை பதிவை நினைவில் கொள்க)

வணிகத்தினால் மின்சார கட்டணம் 10000 செலுத்தப்பட்டது

இதற்கான இரட்டை பதிவு

மின்சார கணக்கு வரவு 10,000
காசு கணக்கு செலவு 10,000

இது காசேட்டில் செலவு பக்கம் பதியப்படும். பேரேட்டில் பதியப்படமாட்டாது. ஏனெனில் காசேடு மூல ஏடாகவும் பேரேடாகவும் தொழிற்படும்

மின்சார கணக்கானது பேரேட்டு கணக்கில் வருமாறு பதியப்படும்

மின்சார கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
xxx	காசு		10,000				

உதாரணம்

சுமுது வணிகத்தில் 2021 ஜனவரி மாதத்தில் நிகழ்ந்த கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

01.01.2021 உரிமையாளர் மூலதனமாக ரூ .100000 இட்டார்

10.01.2021 ரூ .50000இற்கு இருப்புகள் கொள்வனவு செய்யப்பட்டன.

15.01.2021 பொருள் விற்பனை ரூ .75000

20.01.2021 மின்கட்டணம் செலுத்தியது ரூ .15,000

20.01.2021 உரிமையாளர் காசாக ரூ. 5000 பற்றினார்.

21.01.2021 கடன் கொடுநருக்கு செலுத்திய காசு ரூ. 25000

25.01.2021 கடன் பட்டோர் இடமிருந்து பெற்ற காசு ரூ. 50000

மேற்குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களை சுமுது வணிகத்தின் காசேடு பேரேடுகளில் பதிக.

காசேடு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
01.01.2021	மூலதனம்		100,000	10.01.21	கொள்வனவு		50,000
15.01.21	விற்பனை		75,000	20.01.21	மின்கட்டணம்		15,000
25.01.21	கடன் பட்டோர்		50,000	20.01.21	பற்று		5,000
				21.01.21	கடன் கொடுத்தோர்		25,000
				31.01.21	மீ/செ		130,000
			225,000				**225,000**
01.02.21	மீ/வ		130,000				

மூலதன கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
31.01.21	மீ/செ		100,000	01.01.21	காசு		100,000
			100,000				**100,000**
				01.02.21	மீ/வ		100,000

மின்சார கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
20.01.21	காசு		15,000	31.01.21	மீ/செ		15,000
			15,000				**15,000**

கொள்வனவு கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
10.01.21	காசு		50,000	31.01.21	மீ/செ		50,000
			50,000				**50,000**

பற்று கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
20.01.21	காசு		5,000	31.01.21	மீ/செ		5,000
			5,000				**5,000**

கடன்கொடுனர் கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
31.01.21	மீ/செ		25,000	20.01.21	காசு		25,000
			25,000				**25,000**
				01.02.21	மீ/வ		25,000

கடன்படுனர் கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
31.01.21	மீ/செ		50,000	25.01.21	காசு		50,000
			50,000				**50,000**
				01.02.21	மீ/வ		50,000

விற்பனை கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
31.01.21	மீ/செ		75,000	15.01.21	காசு		75,000
			75,000				**75,000**
				01.02.21	மீ/வ		75,000

குறிப்பிட்ட கால முடிவில் வரவு செலவு பதிவுகளின் மொத்த பெருமானங்களிடையிலான வேறுபாட்டு தொகை கணக்கின் மீதி எனப்படும்.

மேற்குறிப்பிட உதாரணத்தின் படி வரவு பக்கம் பெறுமானம் அதிகமாக இருப்பதனால் அந்த தொகையை செலவு பக்கம் கொண்டு சென்று செலவுகள் அனைத்தையும் வரவு பெறுமதியில் இருந்து கழித்து மிஞ்சும் தொகையை மீண்டும் வரவு பக்கம் கொண்டு வந்து வரவு மீதியாக காட்டப்பட்டுள்ளது .

<u>கழிவுகள்</u>



<u>வியாபார கழிவு</u>

வியாபாரக் கழிவுகள் அநேகமான வணிகங்களில் பொருள்களின் பட்டியல் விலையிலிருந்து யாதேனுமொரு தொகையைக் குறைத்து விற்பனை செய்வதுண்டு. இவ்வாறு பட்டியல் விலையிலிருந்து குறைக்கப்படும் பெறுமானத்தினை வியாபாரக் கழிவு என அழைக்கலாம். இவ்வாறு குறைக்கப்படும் பெறுமானம் விற்பனையாளருக்குக் கொடுத்த வியாபாரக் கழிவாகவும் கொள்வனவாளருக்குப் பெற்ற வியாபாரக் கழிவாகவும் அமையும்.

வணிகத்தினால் பேணப்படும் கொள்வனவுக் கணக்கில் அல்லது விற்பனைக் கணக்கில் வியாபாரக் கழிவு கழித்த பின்னர் வரும் தேறிய பெறுமதியை யே பதிவு செய்ய வேண்டும். இதனால் வியாபாரக் கழிவானது கணக்குகளில் பதியப்படுவதில்லை.

உதாரணம் :

கொள்வனவு செய்யும் பொருளின் குறித்த விலை = ரூ .30 000

குறைப்பதற்குரிய வியாபாரக்கழிவு 10 %

இதற்கமைய,

வியாபாரக் கழிவுத் தொகை 30 000 X 10/100 = ரூ . 3 000

வியாபாரக் கழிவு கழித்த பின்னரான தேறிய பெறுமதி = ரூ 27,000.00

கணக்குகளில் ரூ .27 000 மட்டுமே பதியப்படும் .

வரவு **கொள்வனவுக் கணக்கு** செலவு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
xxx	காசு		27,000				

வரவு **காசு கணக்கு** செலவு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
				xxx	கொள்வனவு		27,000

காசுக்கழிவுகள்

காசுக் கழிவுகள் கடனுக்குப் பொருள்கள் விற்பனை செய்யும் போது கடன்பட்டோர் உருவாகுவர். இங்கு பெறப்பட வேண்டிய தொகையைக் கடன்பட்டோர் கணக்கில் பதிவு செய்ய வேண்டும் . அவ்வாறே பொருள்கள் கடனுக்குக் கொள்வனவு செய்யும் போது கடன் கொடுத்தோர் உருவாகுவர் . இவ்வாறு செலுத்த வேண்டிய பணம் கடன் கொடுத்தோர் கணக்கில் பதிய வேண்டும். இக்கடன் தொகைகளைத் தீர்க்கும் போது காசுக்கழிவு உருவாகின்றது.

வணிகக் கொடுக்கல் வாங்கல்களைக் கடனுக்கு மேற்கொள்ளும் போது விரைவாகக் கடனைத் தீர்ப்பனவு செய்யுமாறு கொள்வனவாளரை ஊக்குவிக்கும் நோக்குடன் குறிப்பிட்ட காலத்தினுள் கடனைத் தீர்த்தால் கடன் தொகையிலிருந்து ஒரு தொகை குறைக்கப்படும் என்ற நிபந்தனையை விற்பனைப் பட்டியல்களில் சேர்த்துக் கொள்ள முடியும் . அவ்வாறு குறிப்பிட்ட காலத்தினுள் கடன் தீர்க்கப்படும் போது அக்கடன் தொகையிலிருந்து குறைத்துக் கொள்ளப்படும் தொகை காசுக்கழிவாகக் கருதப்படும்.

காசுக்கழிவு இரண்டு வகைப்படும்

- கொடுத்த கழிவு
- பெற்ற கழிவு

காசுகழிவுகளை கணக்குகளில் பதிவு செய்தல்

கொடுத்த காசு கழிவுவிற்குரிய இரட்டை பதிவு

கொடுத்த கழிவு கணக்கு வரவு XXX
கடன்பட்டோர் கணக்கு செலவு XXX

பெற்ற காசு கழிவிற்குரிய இரட்டை பதிவு

கடன் கொடுநர் கணக்கு வரவு XXX
பெற்ற கழிவு கணக்கு செலவு XXX

உதாரணம் :

மது வணிகத்தின் 2020.03.01 திகதியில் பின்வரும் மீதிகள் காணப்பட்டன
கடன்பட்டோர் மீதிகள்

சுபா	ரூ. 20,000
கமலா	ரூ. 40,000
	ரூ. 60,000

கடன் கொடுத்தோர் மீதிகள்

விமலா	ரூ. 25,000
கசுன்	ரூ. 35,000
	ரூ. 60,000

காசு மீதி	ரூ. 100,000

மார்ச் மாதம் பின்வரும் கொடுக்கல் வாங்கல்கள் இடம் பெற்றன
1. 03.03.2021 சுபாவிடம் இருந்து பெற்ற பணம் ரூ 10,000 கழிவு ரூ 1,000
2. 05.03.2021 கமலாவிடம் இருந்து ரூ 20,000 பணம் பெறுவனவின் போது அனுமதித்த கழிவு 10%
3. 10.03.2021 விமாவுக்கு கொடுத்த காசு ரூ 20,000 கழிவு ரூ 5,000
4. 15.03.2021 கசுனிற்கு ரூ 10,000 காசு கொடுப்பனவின் போது பெற்ற கழிவு 5%

மேல தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை பேரேடுகளிலும் காசேட்டிலும் பதிந்து அவற்றை சமப்படுத்துக .

காசேடு

திகதி	விபரம்	பே ப	கழிவு	தொகை	திகதி	விபரம்	பே ப	கழிவு	தொகை
01.03.21	மீ/வ			100,000	10.03.21	விமலா		5,000	20,000
03.03.21	சுபா		1000	10,000	15.03.21	கசுன்		500	9,500
05.03.21	கமலா		2000	18,000	31.03.21	மீ/செ			98,500
			3,000	**128,000**				**5,500**	**128,000**
01.04.21	மீ/வ			98,500					

சுபா கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
01.03.21	மீ/வ		20,000	03.03.21	காசு		10,000
				03.03.21	கழிவு		1,000
				31.03.21	மீ/செ		9,000
			20,000				**20,000**
01.03.21	மீ/வ		9,000				

கமலா கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
01.03.21	மீ/வ		40,000	05.03.21	காசு		18,000
				05.03.21	கழிவு		2,000
				31.03.21	மீ/செ		20,000
			40,000				**60,000**
01.03.21	மீ/வ		20,000				

கொடுத்த கழிவு கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
03.03.21	சுபா		1,000	31.03.21	மீ/செ		3,000
05.03.21	கமலா		2,000				
			3,000				**3,000**

விமலா கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
10.03.21	காசு		20,000	01.03.21	மீ/வ		25,000
10.03.21	கழிவு		5,000				
31.03.21	மீ/செ		25,000				
			25,000				**25,000**

கசுன் கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
15.03.21	காசு		9,500	01.03.21	மீ/வ		35,000
15.03.21	கழிவு		500				
31.03.21	மீ/செ		25,000				
			35,000				**35,000**
				01.04.21	மீ/வ		25,000

பெற்ற கழிவு கணக்கு

திகதி	விபரம்	பேப	தொகை	திகதி	விபரம்	பேப	தொகை
31.03.21	மீ/செ		3,000	10.03.21	விமலா		5000
				15.03.21	கசுன்		500
			3,000				**3,000**

சில்லறை காசேடு

வணிகமொன்றில் தொடர்ச்சியாக இடம் பெறும் சிறிய பெறுமானங்களுடன்கூடிய காசுக் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்யும் மூல ஏடு சில்லறைக் காசேடு என அழைக்கப்படும் .

இதன் பணியினை நிறைவேற்ற பிரதான காசாளரினால் சில்லறை காசாளர் நியமிக்கப்படுவார். சில்லறை காசு கைச்சாத்து இதன் பிரதான மூல ஆவணமாகும் .

சில்லறை காசு வசக்கட்டு / முற்பண முறை சில்லறை காசேடு

சில்லறைக் காசு கொடுப்பனவுகளைக் கட்டுப்பாடுகளுடன் மேற்க்கொள்வதற்காக பிரதான காசாளரினால் நியமிக்கப்படும் சில்லறைக் காசாளருக்கு ஏதேனும் குறித்த பணத் தொகையொன்று சிறு கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கென வழங்கப்படும். இதனைச் “**சில்லறைக் காசு வசக்கட்டு** " என்று அழைப்பர் . இச்சில்லறைக் காசாளர் வசகட்டைப் பயன்படுத்திச் சிறிய காசுக் கொடுப்பனவுகளை மேற்கொள்வதும், சில்லறைக்காசேட்டைப் பராமரிப்பதும் சில்லறைக் காசாளரின் பொறுப்பாகும் .

சில்லறை காசு செலவுகளை மீள் நிரம்பல்

தன்னிடமுள்ள முற்பணத்தொகை தீர்ந்து போவதற்கு முன்பாகச் சில்லறைக் காசாளர் பிரதான காசாளரிடமிருந்து மீளவும் காசினைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும் . இதற்காக குறித்த காலப்பகுதியில் செலவிடப்பட்ட தொகைக்குச் சமமான தொகையினை மீளவும் பிரதான காசாளர் சில்லறைக் காசாளாருக்கு வழங்குதல் " **வசக்கட்டு மீள் நிரப்பல்** " எனப்படும்.

உதாரணம் : நயனா வணிகத்தின் சில்லறைக் காசு வசகட்டுத் தொகை ரூ . 3000 ஆகும் . கிடைக்கப் பெற்ற முற்பணக்காசின் மூலம் மேற்கொள்ளப்பட்ட சில்லறைக்காகக் கொடுப்பனவுகள் பின்வருமாறு.

எழுது கருவி	ரூ 500
சுத்திகரிப்புச் செலவுகள்	ரூ 750

உபசரணைச் செலவுகள் ரூ 300

போக்குவரத்துச் செலவுகள் ரூ 550

மொத்தம் ரூ **2,100**

இதற்கமைய ரூ .2,100 சில்லறைச் செலவினங்களுக்குச் செலவிடப்பட்டுள்ளது . சில்லறைக் காசாளரினால் மீளவும் பணம் கேட்கப்படும் போது சில்லறைக் காசாளரால் செலவிடப்பட்ட ரூ .2,100 மட்டுமே அவருக்கு வழங்கப்படும் . இதனைச் சில்லறைக் காசுக் கட்டு நிதி (வசக்கட்டு) மீள்நிரப்பல் எனப்படும் .

அப்பொழுது,

மீதமாகவுள்ள பணம் (சில்லறைக் காசு மீதி) ரூ 900
சில்லறைச் செலவுகள் மீள்நிரப்பல் ரூ 2,100
மொத்த காசுக் கட்டு நிதி / வசக்கட்டு ரூ 3,000

சில்லறைக் காசுக் கொடுப்பனவுகளை மீள் நிரப்புவதற்காகச் சில்லறைக் காசாளரால் , இதுவரையில் மேற்கொள்ளப்பட்ட அனைத்துச் சில்லறைக் காசுக் கொடுப்பனவுகளுக்குரிய கைச்சாத்துக்களை உள்ளடக்கும் வகையில் கைச்சாத்தொன்றைத் தயாரித்துப் பிரதான காசாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும் .

<u>சில்லறை காசேட்டினை தயார் செய்தல்</u>

சில்லறை காசு கொடுப்பனவுகளை பேரேடுகளுக்கு இலகுவாக மாற்றி கொள்வதற்கு ஒவ்வொரு கொடுப்பனவுகளுக்கும் பொருத்தமான பகுப்பாய்வு நிரல்களுடன் சில்லறை காசேடு தயாரிக்கப்படும் .

இப்பகுப்பாய்வு நிரலில் உள்ளடக்கமுடியாத வகையில் ஏற்ப்படும் செலவுகளை பகுப்பாய்வு நிரலின் இறுதியில் நானாவித செலவுக்கான நிரலில் பதியப்படும் .

<u>சில்லறை காசேடு</u>

பெறுவனவுகள்	பே: ப	விபரம்	திகதி	கைகா இல	தொகை	பகுப்பாய்வு நிரல்				
						எழுது கருவி	அஞ்சல்	போக்கு வரத்துச் செலவுகள்	நானாவித செலவுகள்	ஏனைய பேரேட்டு கணக்கு

- சில்லறைக் காசு வசக்கட்டு முற்பணப் பெறுவனவுகளும் சில்லறைச் செலவுகளுக்கான கொடுப்பளவுகளும் முதன் முறையாக சில்லறைக்

காசேட்டில் பதிவு செய்யப்படுவதனால் மூல ஏடொன்றின் தொழிற்பாட்டினைச் சில்லறைக் காசேடு நிறைவேற்றுகின்றது.

- சில்லறைக் காசேட்டில் வரவு , செலவு என இரு பக்கங்கள் இருப்பதனால் இரட்டைப் பதிவுத் தத்துவத்திற்கமைய (சொத்துக் கணக்கு தொடர்பான விதி) பதிவு செய்தல் இடம்பெறும் , எனவே இதனூடாக கணக்கொன்றின் தொழிற்பாட்டையும் சில்லறைக் காசே நிறைவேற்றுகின்றது .

சில்லறை காசு வசக்கட்டு முற்பணம் பெறுவதற்கான இரட்டை பதிவு

சில்லறை காசேடு	**வரவு**	**XXX**
காசு கணக்கு	**செலவு**	**XXX**

இங்கு ஒவ்வொரு பகுப்பாய்வு நிரல்களினதும் கூட்டுத்தொகைகளுக்கும் குறிப்பிட்ட பேரேட்டு கணக்கில் வரவு வைக்கப்படும் .

பகுப்பாய்வு நிரல் கூட்டுத்தொகைகளுக்குரிய இரட்டை பதிவு

குறித்த செலவு கணக்கு	**வரவு**	**xxx**
சில்லறை காசேடு	**செலவு**	**xxx**

குறித்த கால இறுதியில் சில்லறை காசேட்டை சமப்படுத்தும்போது அதன் வரவு பக்க கூட்டுத்தொகையை செலவு பக்க கூட்டுத்தொகை நிரலில் பதிவு செய்து அதன் வேறுபாட்டை மீதியொன்றாக முன்கொண்டு வர வேண்டும்.

உதாரணம் :

தர்ஷனா வணிகத்தின் 2021 ஏப்ரல் மாதம் இடம்பெற்ற கொடுக்கல் வாங்கல்கள் பின்வருமாறு

சில்லறை காசு கட்டுநிதி ரூ . 3,000

2021 மார்ச் இல் சில்லறை காசுக்காக கொடுப்பனவுகளின் கூட்டுத்தொகை ரூ 2,500

2021 மே 01 ஆம் திகதி சில்லறை செலவுகள் மீள்நிரப்பப்பட்டன

ஏப்ரல் மாத கொடுக்கல் வாங்கல்கள் வருமாறு

- 03.04.21 எழுதுகருவி ரூ 80
- 05.04.21 பேனா பென்சில் கொள்வனவு ரூ 70
- 08.04.21 போக்குவரத்து செலவு ரூ 150
- 12.04.21 முச்சக்கரவண்டி செலவு ரூ 50
- 15.04.21 சுத்திகரிப்பு செலவு ரூ 150
- 24.04.21 உபசரணை செலவு ரூ 300
- 27.04.21 சமந்தாற்கு கொடுத்த காசு ரூ 1500

மேல தரப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை பேரேடுகளிலும் சில்லறை காசேட்டிலும் பதிந்து அவற்றை சமப்படுத்துக .

சில்லறை காசேடு

பெறுவனவுகள்	பே: ப	திகதி	விபரம்	கைகா இல	தொகை	பகுப்பாய்வு நிரல்				
						எழுது கருவி	அஞ்சல்	போக்கு வரத்துச் செலவுகள்	நானாவித செலவுகள்	ஏனைய பேரேட்டு கணக்கு
		2021 ஏப்ரல்								
2500		01	மீ/வ							
500		01	வசக்கட்டு மீள்நிரப்பல்							
		04	எழுதுகருவி		80	80				
		05	பேனா பென்சில்		70	70				
		08	போக்குவரத்து		150			150		
		12	முச்சக்கரவண்டி		50			50		
		15	சுத்திகரிப்பு		150					150
		24	உபசரணை		300				300	
		27	சமந்தா		1,500					1,500
					2,300	**150**		**200**	**300**	**1,650**
		31	மீ/செ		700	பேரேட்டு கணக்குகளுக்கு மாற்றம்				
3,000					**3,000**					
700		01.05.21	மீ/வ							

எழுதுகருவி கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
31.04.21	சி. காசு		150	31.04.21	மீ/செ		150
			150				**150**

போக்குவரத்துச்செலவுகள் கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
31.04.21	சி. காசு		200	31.04.21	மீ/செ		200
			200				**200**

நானாவிதசெலவுகள் கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
31.04.21	சி. காசு		300	31.04.21	மீ/செ		300
			300				**300**

சுத்திகரிப்பு கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
31.04.21	சி. காசு		150	31.04.21	மீ/செ		150
			150				**150**

சமந்தா கணக்கு

திகதி	விபரம்	பே ப	தொகை	திகதி	விபரம்	பே ப	தொகை
31.04.21	சி. காசு		1,500	31.04.21	மீ/செ		1,500
			1,500				**1,500**